# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2025 ஆம் ஆண்டு மே மாதம் வெள்ளிக்கிழமை நாள் 30.05.2025 காலை 10.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

### பொருள்: 1

அரசாணை(நிலை) எண். 95, நிதி (படிகள்) துறை நாள்.28.04.2025ல், மாநில அரசு அலுவலர்களுக்கு (மற்றும்) உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்களுக்கு 01.01.2025 முதல் அகவிலைப்படியினை 53 சதவீதத்திலிருந்து 55% ஆக உயர்த்தியும், மேலும் ஜனவரி முதல் ஏப்ரல்–2025 வரையிலான மாதங்களுக்குரிய உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வித்தியாச நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்ள அனுமதித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு 01.01.2025 முதல் 55% என்ற அடிப்படையில் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்கியும், ஜனவரி முதல் ஏப்ரல்–2025 வரையிலான மாதங்களுக்குரிய அகவிலைப்படி வித்தியாச நிலுவைத் தொகயினை பெற்றுக்கொள்ளுமாறும் ஆணையிடப்பட்டுள்ள மேற்கண்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(சி2 / 188 / 2025 (மையம்))

**தீர்மானம் எண்.324 பொருள்: 1 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**தமிழ்நாடு அரசு**
**2025**

**கையெழுத்துத் தொடர்**

**நிதி (படிகள்) துறை**

**அரசாணை (நிலை) எண்.95, நாள்: 28-04-2025.**

*(சித்திரை - 15 , திருவள்ளுவர் ஆண்டு 2056)*

**சுருக்கம்**

**படிகள்** - அகவிலைப்படி - **01-01-2025** முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:-**

அரசாணை (நிலை) எண்.317, நிதி (படிகள்) துறை, நாள். 18-10-2024.

-oOo-

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது:-

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01-07-2024 | அடிப்படை ஊதியத்தில் 53 சதவீதம் |

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 53 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக அகவிலைப்படியை 01-01-2025 முதல் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், அகவிலைப்படியினை 2 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01-01-2025 | அடிப்படை ஊதியத்தில் 55 சதவீதம் |

3. ஜனவரி 2025 முதல் ஏப்ரல் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லாப் பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

**த.பி.பா.**

-2-

4. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேரப் பணியாளர்களுக்கும், சில்லறைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேரப் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

5. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள் / எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

6. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 3 இல் ஒப்பளிக்கப்பட்ட திருத்திய அகவிலைப்படி நிலுவைப்பட்டியல் சமர்பிப்பது தொடர்பாக சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயச்சந்திரன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

அனைத்துத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்/ செயலாளர், சென்னை- 9
முதன்மைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை-22.
ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், ராஜ்பவன், சென்னை-22.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை-22.
தலைமை தணிக்கை இயக்குநர் (மு.கூ.பொ), பேராசியர் க.அன்பழகன் மாளிகை, சென்னை-35.

-3-

அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
மாநில தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் /அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை–35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து சார் கருவூல அலுவலர்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
ஆணையாளர், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சென்னை–108.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து அரசுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர் / தூத்துக்குடி / வேலூர் / தஞ்சாவூர் / கும்பகோணம் / திண்டுக்கல் / நாகர்கோயில் / ஓசூர் / ஆவடி / காஞ்சிபுரம் / கரூர் / கடலூர் / சிவகாசி / தாம்பரம்/ காரைக்குடி / நாமக்கல் / புதுக்கோட்டை / திருவண்ணாமலை மாநகராட்சி.
ஊரக வளர்ச்சித் துறை, அனைத்து உதவி இயக்குநர்கள் / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் / அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
இயக்குநர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், தரமணி, சென்னை–113.

**நகல் பெறுநர்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் – I, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் – (II & III ), சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

-4-

அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நிதித்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உபரி நகல்கள்.

**–/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /–**

28/4/2025

**பிரிவு அலுவலர்**

28/4/25

## பொருள்:2

அரசாணை (நிலை) எண் 230, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 06.05.2025ல், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, **புத்தூர் (தென்னூர்) கிராமம், புதிய வார்டு Y, பிளாக் எண் 9, சர்வே எண் 57/12ல், 0.0006.0** ச.மீ. பரப்பளவுள்ள, திரு.மு.அன்பழகன் என்ற பெயரில் பதிவாகியுள்ள இடத்தில், நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலையினை நிறுவ அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி அரசாணை, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பார்வையிட்டுப் பதிவு செய்யலாம்.

(எப்1/6834/2010/மையம்)

**தீர்மானம் எண்.325 பொருள்: 2 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

சுருக்கம்

சிலை – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம் – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம்–5, புத்தூர் (தென்னூர்) கிராமம் – வார்டு Y, பிளாக் எண் 9, நகரளவை எண் 57/12–இல் 0.0006.0 ச.மீ. மு.அன்பழகன் என்ற பெயரில் பதிவாகியுள்ள இடத்தில் நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலையினை நிறுவ அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
நிலமுடிவு அலகு, நிலமுடிவு 4(2) பிரிவு

**அரசாணை (நிலை) எண்.230** **நாள் 06.05.2025**
**ஸ்ரீவிசுவாவசு வருடம், சித்திரை 23,**
**திருவள்ளுவராண்டு 2056,**

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.183, வருவாய் (நி.மு.4(1)) துறை, நாள் 23.05.2017.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரது சுற்றறிக்கை ந.க.எண். வ.நி VII(1)1946/2019, நாள் 26.03.2019.
3. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.E5/21955/2024, நாள்: 05.05.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி. 7(1)/P/236/2025 நாள் 06.05.2025.

......

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–5, புத்தூர் (தென்னூர்) கிராமம், வார்டு Y, பிளாக் எண் 9, நகரளவை எண் 57/12–இல் 0.0006.0 ச.மீ. நிலத்தில் நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலையினை அமைக்க பரிந்துரை செய்து உரிய செயற்குறிப்பினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு அனுப்பியுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திராவிட முன்னேற்றக் கழகம்,

2

திருச்சி மாநகரம் (மேற்கு), மாநகரச் செயலாளர், திரு.மு.அன்பழகன் என்பவர் அளித்துள்ள மனுவினையும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பினையும் ஆய்வு செய்து பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

(i) <u>திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை:</u>

திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–5, புத்தூர் (தென்னூர்) கிராமம், வார்டு Y, பிளாக் எண் 9, நகரளவை எண் 57/12–இல் இரயத்துவாரி, நத்தம் மனை, விஸ்தீரணம், 0.0006.0 ச.மீ இடம், ஆறுமுகம் பிள்ளை மகன் குமாரசாமி எனத் தாக்கலாகியிருந்தது.

தானசெட்டில்மென்ட் ஆவணம் 1921/2025–இன் படி காலஞ்சென்ற திரு.குமாரசாமி என்பவரது வாரிசுதாரர்கள் திருமதி.மரகதம்–1, செல்வி.கு.பூரணி–2 மற்றும் செல்வி.கு.தரணி ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் திரு.மு.அன்பழகன் அவர்களுக்கு மேற்படி இடத்தினை தானமாக வழங்கியுள்ளனர். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருச்சிராப்பள்ளி மேற்கு திருச்சிராப்பள்ளி வட்டம் அவர்கள் வழங்கியுள்ள பட்டா பதிவு டி.ஆர்.எண்.2025/ 0153/15/05535/TR, நாள் 06.05.2025–ன்படி, நில உரிமையாளர் பெயர் மு.அன்பழகன் என பெயர் குறிப்பிடப்பட்டு, நகரளவை பதிவேட்டில் தாக்கலாகியுள்ளது. மேற்கண்ட நிலத்தில் நீர்நிலைகள் மற்றும் நீர் போக்குவரத்து ஏதுமில்லை. மேற்படி நிலங்களில் உயர்/தாழ்வு அழுத்த மின்கம்பிகள் ஏதும் செல்லவில்லை. மேற்படி நிலங்களில் புராதனச் சின்னங்கள் ஏதுமில்லை. மேற்படி சிலை அமைப்பதனால் பொது அமைதிக்கு பங்கம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கலச்சிலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என 05.05.2025 நாளிட்ட கடிதத்தில் வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

(ii) <u>திருச்சிராப்பள்ளி மாநகரக் காவல் ஆணையரின் அறிக்கை:</u>

திருச்சிராப்பள்ளி மாநகர காவல் ஆணையர் 5.5.2025 நாளிட்ட கடிதத்தில், மேற்படி இடத்தில் மறைந்த நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கலச்சிலை அமைப்பதால் பொதுமக்களுக்கோ அல்லது பொதுப் போக்குவரத்திற்கோ எவ்வித இடையூறும் ஏற்படாது எனத் தெரிய வருவதாகவும், மேலும், திருவுருவச் சிலை அதிகமான பொதுமக்கள் வந்து செல்லும் பொது இடத்தில் நிறுவப்பட உள்ளதால் சிலை பாதுகாப்பாக இருப்பதற்கு சிலையைச் சுற்றிலும் கம்பி வேலிக்குள் பாதுகாப்பாக அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

(iii) <u>திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கை :</u>

மாவட்ட வருவாய் அலுவலர் மேற்படி புலத்தை 05.05.2025 அன்று புலத்தணிக்கை செய்து, மேற்படி நிலத்தில் மயானம் மற்றும் கல்லறை ஏதுமில்லை என்றும் மேற்கண்ட நிலத்தில் நீர்நிலைகள் மற்றும் நீர் போக்குவரத்து ஏதுமில்லை என்றும் மேற்படி நிலங்களில் உயர் / தாழ்வு அழுத்த மின்கம்பிகள் ஏதும் செல்லவில்லை என்றும் மேற்படி நிலங்களில் புராதனச் சின்னங்கள் ஏதுமில்லை என்றும் சிலை அமைக்கப்படவுள்ள பகுதி காலியிடமாக உள்ளது என்றும், மேற்படி

சிலை அமைப்பதனால், பொது அமைதிக்கு பங்கம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் தெரிவித்து, சிலை அமைக்க பரிந்துரை செய்துள்ளார்.

(iv) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் 5.5.2025 நாளிட்ட கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றத்தில் 5.5.2025 அன்று நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ சிலை அமைக்க அரசின் அனுமதியினைப் பெற்றுத்தரக் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

3. எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் அடிப்படையிலும், அரசாணை (நிலை) எண்.183, வருவாய்த்துறை, நாள்23.05.2017 மற்றும் மாண்பமை உச்ச நீதிமன்ற வழக்கு எண் 8519/2006 தீர்ப்பு நாள் 18.01.2013, மாண்பமை சென்னை நீதிப்பேராணை மனு 22516/2006 தீர்ப்பு நாள் 23.01.2014, 31221/2023 தீர்ப்பு நாள் 7.3.2024, 23140/2014 தீர்ப்பு நாள் 7.10.2021, ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகள்/ உத்தரவுகளின் அடிப்படையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், கோ-அபிஷேகபுரம் கோட்டம், புத்தூர் (தென்னூர்) கிராமம், வார்டு Y, பிளாக் 9, நகரளவை எண். 57/12-இல் 0.0006.0 ச.மீ பரப்பில் நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை அமைக்க கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் அடிப்படையிலும், கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையிலும், மேற்காண் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்-5, புத்தூர் (தென்னூர்) கிராமம், வார்டு Y, பிளாக் எண் 9, நகரளவை எண் 57/12-இல் 0.0006.0 ச.மீ. மு.அன்பழகன் என்ற பெயரில் பதிவாகியுள்ள இடத்தில் நடிகர் திலகம் டாக்டர்.செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலையினை நிறுவ கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது :-

நிபந்தனைகள்:

i) சிலை நிறுவுபவர்களின் பொருட்செலவிலேயே சிலையினை அமைத்து அதனை பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

ii) சிலையைச் சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்.

iii) சிலை வெண்கலத்தில் மட்டுமே செய்து உயர்ந்த பீடம் வைத்து அதன்மேல் நிறுவ வேண்டும், வேறு எந்த மாற்றங்கள் செய்வதோ அல்லது கூடுதலாக புதிய கட்டிடங்கள் கட்டுவதோ கூடாது.

iv) கம்பி தடுப்பு சிறந்த முறையில் உறுதியாகவும் அழகுறவும் அமைக்கப்பட வேண்டும்.

v) சிலை உள்ளே அடைபட்டது போல அமைக்கப்படக்கூடாது.

vi) அமைக்கப்படும் சிலை தொடர்பாக ஏதேனும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படின் சிலை அமைப்புக் குழுவினரே முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.

vii) சிலையை ஊர்வலமாகவோ உற்சவமாகவோ கொண்டு செல்வதோ விழாவாக நடத்துவதோ கூடாது.

viii) பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் சிலை வழிபாடு செய்வதோ மக்கள் கூடுவதோ கூடாது.

ix) மேற்படி சிலை அமைப்பதால் பொது மக்களுக்கோ போக்குவரத்திற்கோ எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது.

x) அரசாணை (நிலை) எண்.183, வருவாய்த் (நி.மு.4(1)) துறை, நாள் 23.05.2017, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரக சுற்றறிக்கை கடித எண்.வநி VII(1)/1946/2019, நாள் 26.03.2019 மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்ற சிறப்பு விடுப்பு மனு எண்.8519/2006–இன் 18.01.2013–இல் குறிப்பிட்ட தடை செய்யப்பட்டுள்ள பொது சாலைகள், நடைபாதைகள், சாலையோரங்கள் மற்றும் பிற பொது பயன்பாட்டு இடங்களில் மேற்கண்ட சிலை வரவில்லை என்பதை மாவட்ட ஆட்சியர் / காவல் கண்காணிப்பாளர் ஆகியோரால் உறுதி செய்யப்பட வேண்டும்.

xi) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண்.23140/2014–இல் 07.10.2021–ஆம் நாளிட்ட தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு முறைகள் பின்பற்றப்பட்டதா என்பதை மாவட்ட ஆட்சியர் /காவல் கண்காணிப்பாளர் ஆகியோரால் உறுதி செய்யப்பட வேண்டும்.

xii) வருங்காலங்களில் பல்வேறு காரணங்களினால் மேற்படி சிலையை மாற்றி அமைக்கவோ, இடமாற்றம் செய்யவோ உத்தேசிக்கும் பட்சத்தில் உரிய மரியாதையுடன் உரிய அலுவலர்களின் அனுமதியுடன் மனுதாரர் தனது சொந்த நிலத்தில், சொந்த செலவில் மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்கான உறுதி மொழிப் பத்திரம் மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

xiii) நிறுவப்படும் சிலை வெண்கல சிலையாகவும், பராமரிப்பிற்கான முழு செலவு தொகையினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் செலுத்தியதற்கான உறுதி மொழிப் பத்திரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

xiv) சிலையின் பாதுகாப்பு கருதி தகுந்த பாதுகாப்பு வசதிகளுடன் சிலையைச் சுற்றி கம்பிவேலி அமைக்கப்பட வேண்டும். சிலையினைச் சுற்றி கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொறுத்தி முறையாக பராமரித்தல் வேண்டும் மற்றும் ஏதேனும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் காவல்துறை மற்றும் வருவாய்துறையினர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு சிலை அமைப்பு நிர்வாகிகளால் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்ற உறுதிமொழி வழங்க வேண்டும்.

xv) சிலை அமையவுள்ள உத்தேச புலத்தில் எந்தவித நீதிமன்ற வழக்குகளோ / மேல்முறையீடு மனுக்களோ நிலுவையில் இல்லை என்பதையும், பிரஸ்தாப புலத்தில் சிலை அமைப்பது தொடர்பாக

நீதிமன்ற தடையாணை ஏதும் இல்லை என்பதையும் மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

xvi) மேற்காணும் நிபந்தனைகளில் ஏதேனும் விதிமீறல் ஏற்படுமேயானால் சிலை நிறுவுவதற்கு வழங்கப்பட்ட அனுமதி உடன் இரத்து செய்யப்படும்.

5. மேலே பத்தி 4 இல் உள்ள ஆணையின்படி, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சென்னை – 600 005.
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி.
மனுதாரர் (திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆட்சியர் வழியாக)

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
சட்டத் துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை –9.
இருப்பு கோப்பு/உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

06.05.2025
பிரிவு அலுவலர்

## பொருள்:3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டத்திற்குட்பட்ட தேர்தல் வார்டு 13, மாநகராட்சி பகுதி மற்றும் அதனைச் சுற்றி 8 கிலோ மீட்டருக்குள் ஆட்சேபனையற்ற கீழ்க்கண்ட அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டிக் குடியிருந்து வரும் நபர்களுக்கு வரன்முறை செய்து பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (கிழக்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ1/945/2025, நாள்** 02.05.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**தேவதானம் – சிந்தாமணி கிராமம் (வெனிஸ் நகர்)**

| வ.எண் | வார்டு | பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | F | 22 | 319 | ரயத்து மனை – திருச்சி நகராட்சி இடம் |
| 2 | F | 22 | 1 | சர்க்கார் புறம்போக்கு – முனிசிபாலிட்டி |

**தாராநல்லூர் கிராமம்**

| வ.எண் | வார்டு | பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 3 | P | 40 | 4/1 | சர்க்கார் புறம்போக்கு – களம் |
| 4 | P | 40 | 3 | சர்க்கார் புறம்போக்கு – பவுண்டு |
| 5 | P | 40 | 6 | சர்க்கார் புறம்போக்கு – கிராம சாவடி |

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடங்கள், **தேவதானம், சிந்தாமணி மற்றும் தாராநல்லூர்** கிராமங்களில் அமைகின்றன.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு & ரயத்து மனை"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/6224/2025/மையம்)

**தீர்மானம் எண்.326 பொருள்: 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, **பாப்பாக்குறிச்சி கிராமம், புல எண்** 205/2, "சாலை" என நகரளவைக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள **ஹெக் 2.00.5 ச.மீ.** பரப்பளவுள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தில், **3500 ச.மீ. நிலத்தினை மட்டும் அங்கூறான் அறிவியல் மையம்** (Ankooran Science Centre) அமைப்பதற்கு, மேற்படி நிலத்தினை **"முதன்மைக் கல்வி அலுவலர், திருச்சிராப்பள்ளி பள்ளிக் கல்வித் துறை" எனும்** பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மான நகலினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/11281/2025, நாள் 03.05.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, உத்தேச இடம் பார்வையிடப்பட்டது. மேற்படி இடம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, **வார்டு குழு அலுவலகம் 3, புதிய தேர்தல் வார்டு எண் 38ல்** அமைகிறது. மேலும், **நகரளவைக் கணக்கில், "அரசுப் புறம்போக்கு – சாலை"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், மாணவ – மாணவியர் நலனைக் கருத்தில் கொண்டும், **அங்கூறான் அறிவியல் மையம்** (Ankooran Science Centre) அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக இசைவினை வழங்க, மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : அங்கூறான் அறிவியல் மையம்** (Ankooran Science Centre) அமைத்திட ஏதுவாக, **"முதன்மைக் கல்வி அலுவலர், திருச்சிராப்பள்ளி பள்ளிக் கல்வித் துறை" எனும் பெயருக்கு** நில உரிமை மாற்றம் செய்வதற்கு மாமன்றம் இசைவினை வழங்கலாம்.

(எப்1/5827/2025/மையம்)

**தீர்மானம் எண்.327 பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மொத்த பணிகளையும் கணினி மயமாக்க ஆணையிடப்பட்டதனை அடுத்து கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்ள தனியாக பணியிடங்கள் ஏதும் இது நாள் வரை தோற்றுவிக்கப்படாத நிலையில் ஐந்து வார்டுக்குழு அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகத்தில் கணினி தொடர்பான பணிகள் யாவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொகுப்பூதிய புள்ளி விவரத்தொகுப்பாளர்கள் தங்களது விண்ணப்பத்தில் தற்போது அரசாணை எண். (2டி) 62, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017ன்படி, தொகுப்பூதியம் ரூ.14,000/–ம், இதற்கு 01.04.2023ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியாக ரூ.5848/–ம், ஆக கூடுதல் ரூ.19,848/– பெற்று வருவதாகவும், 01.04.2024 முதல் அகவிலைப்படியினை ரூ.8487/– ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தொகுப்பூதிய பணியாளர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP.No.25345/2023ன்படி வழக்கு தொடரப்பட்டதாகவும், நீதிமன்ற தடையாணையின்படி தற்பொழுது அரசாணை எண். (2டி) 62, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017க்கான 26.02.2024ம் தேதிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையின் அகவிலைப்படி அறிக்கையில் 01.04.2024ஆம் ஆண்டு முதல் (Statement of Showing Details of Dearness Allowance) ரூ.6593.25/– என உயர்த்தியும் மற்றும் 03.03.2025ம் தேதிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையின் அகவிலைப்படி அறிக்கையில் 01.04.2025ஆம் ஆண்டு முதல் (Statement of Showing Details of Dearness Allowance) ரூ.6780/– என உயர்த்தியும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், எனவே 01.04.2024 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியான ரூ.6593.25/–ஐ நிர்ணயம் செய்தும், 01.04.2025 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியான ரூ.6780/–ஐ நிர்ணயம் செய்தும், உயர்த்தப்பட்ட அகவிலைப்படி மற்றும் அதற்குரிய நிலுவைத்தொகைகளை தங்களுக்கு வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

மேலும், OHT ஆப்ரேட்டர்களின் விண்ணப்பத்தில், அரசாணை எண். (2டி) 62, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017ன்படி, Semi–Skilled, Grade–II என்ற வகைப்பாட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு தங்களுக்கு தற்போது ரூ.13,000/– மாத தொகுப்பூதியமாக தற்போது வழங்கப்பட்டுவருவதாகவும், இதனை மேற்படி அரசாணையின்படி ரூ.14,000/– ஆக உயர்த்தி தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வில், மாமன்ற தீர்மானம் எண்.285, நாள்.30.05.2023–ல் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களுக்கு 01.04.2023 முதல் அகவிலைப்படி உயர்த்தி வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனை தொடர்ந்து தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களுக்கு தொகுப்பூதியத்துடன் கூடிய அகவிலைப்படி ரூ.5848/– ஆக உயர்த்தி நாளது தேதிவரையில் வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது, அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017க்கான அகவிலைப்படி அறிவிப்பு நாள்.26.02.2024க்கான Corrigendum இணைப்பு Statement of Showing Details of Dearness Allowance – இல் Employment Under any Local Authority – All Corporation என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு 01.04.2024 முதல் அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the Scheduled Employment | Labour & Employment Department G.O.No. & Date | G.O. Effective from (Date) | Amount of Dearness Allowance Payable |
|---|---|---|---|---|
| Statement of Showing Details of Dearness Allowance Payable with Effect from 01.04.2024 | | | | |
| 1 | Employment in Local Authuority | G.O.(2D) No. Dated. 11.10.2017 | 22.11.2017 | Rs.6593.25/– |

மற்றும் அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017க்கான அகவிலைப்படி அறிவிப்பு நாள்.03.03.2025க்கான Statement of Showing Details of Dearness Allowance – இல் Employment Under any Local Authority – All Corporation என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு 01.04.2025 முதல் அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the Scheduled Employment | Labour & Employment Department G.O.No. & Date | G.O. Effective from (Date) | Amount of Dearness Allowance Payable |
|---|---|---|---|---|
| Statement of Showing Details of Dearness Allowance Payable with Effect from 01.04.2025 | | | | |
| 1 | Employment in Local Authuority | G.O.(2D) No. Dated. 11.10.2017 | 22.11.2017 | Rs.6780/- |

**<u>வழங்கப்படவேண்டிய உயர்த்தப்பட்ட தொகுப்பூதியம் மற்றும் அகவிலைப்படி விவரம்</u>**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | 01.04.2025 முதல் வழங்கப்பட வேண்டிய தொகுப்பூதியம் | 01.04.2024 முதல் 31.03.2025 வரை வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி விவரம் | 01.04.2025 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | புள்ளி விவரத்தொகுப்பாளர் – 16 நபர்கள் | ரூ.14000 / | ரூ.6593.25/- | ரூ.6780/- |
| 2 | ஓட்டுநர் – 1 நபர் | ரூ.14000 / | | |
| 3 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் – 14 நபர்கள் | ரூ.14000 / | | |
| 4 | தூய்மை பணியாளர் – 26 நபர்கள் | ரூ.13000 /- | | |

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ஊதியம் + அகவிலைப்படி |
|---|---|---|---|
| 1 | புள்ளி விவரத்தொகுப்பாளர் – 15 நபர்கள் | 15 | ரூ.14000 + 5848 |
| 2 | மாநகராட்சியுடன் ஈர்த்துக் கொள்ளப்பட்ட புள்ளி விவரத்தொகுப்பாளர் – 1 நபர் (மண்டலம் – 3) | 1 | ரூ.14000 + 5848 |
| 3 | ஓட்டுநர் – 1 நபர் | 1 | ரூ.14000 + 5848 |
| 4 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் – 14 நபர்கள் | 14 | ரூ.13000 + 5848 |
| 5 | தூய்மை பணியாளர் – 26 நபர்கள் | 26 | ரூ.13000 + 5848 |
| மொத்தம் | | 57 | |

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பணிபுரியும் புள்ளி விவரத்தொகுப்பாளர்களின் விவரப்பட்டியல்**

| வ. எண் | பணியாளரின் பெயர் | பணியிடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ஜி.சகாயசாந்தகுமாரி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 2 | ஜி.கஜெலெட்சுமி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 3 | பி.ராஜசேகர் | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 4 | எம்.முரளி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 5 | ஜெ.சரண்யா | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 6 | ஜி.ஜெயலெட்சுமி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 7 | டி.வீரமணி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 8 | அ.சுலோசனா | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 9 | ஆர்.தேவி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 10 | ஜெ.டயானா மேரி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 11 | ஜெ.கவிதா | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 12 | வி.கலைச்செல்வி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 13 | அ.சதிஷ்குமார் | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 14 | ஜி.பாலசுப்பிரமணியன் | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 15 | ஆர்.கிருஷ்ணமூர்த்தி | புள்ளி விவரத்தொகுப்பாளர் |

**பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரிந்து வந்த பணியாளர்களை மாநகராட்சியால் ஈர்த்துக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் விவரப் பட்டியல் (மண்டலம் 2)**

| வ. எண் | பணியாளரின் பெயர் | பணியிடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | செந்தில் குமார் | ஓட்டுநர் |

**பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரிந்து வந்த பணியாளர்களை மாநகராட்சியால் ஈர்த்துக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் விவரப் பட்டியல் (மண்டலம் 3)**

| வ. எண் | பணியாளரின் பெயர் | பணியிடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | K. சத்தியபிரியா | புள்ளி விவரத்தொகுப்பாளர் |
| 2 | G. சவரிமுத்து | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 3 | P. வின்சென்ட் ஆரோக்கிய தாஸ் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 4 | J. ராபேர்ட் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 5 | S. அண்ணாதுரை | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 6 | V. கண்ணாயிரம் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 7 | S. பழனிவேல் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 8 | K. சதீஸ் குமார் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 9 | N. கதிரவன் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 10 | A. மணிமாறன் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 11 | S. குமார் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 12 | D. மேனகா | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 13 | V. ஜெய்கணேஷ் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 14 | S. முத்துகுமரன் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 15 | N. ரமேஷ் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் |
| 16 | சாந்தி / மாணிக்கம் | தூய்மை பணியாளர் |
| 17 | முருகேசன் / செல்லமுத்து | தூய்மை பணியாளர் |
| 18 | ராஜு / ராமன் | தூய்மை பணியாளர் |
| 19 | ஜானகி / கணபதி | தூய்மை பணியாளர் |
| 20 | ரவிக்குமார் / குப்பன் | தூய்மை பணியாளர் |
| 21 | மாரியம்மாள் / ராமன் | தூய்மை பணியாளர் |
| 22 | A. கருணாநிதி | தூய்மை பணியாளர் |
| 23 | சித்ரா / சதாசிவம் | தூய்மை பணியாளர் |
| 24 | செல்வி / நாச்சி | தூய்மை பணியாளர் |
| 25 | பாப்பாத்தி / வரதராஜன் | தூய்மை பணியாளர் |
| 26 | பொன்னம்மாள் / வேல்முருகன் | தூய்மை பணியாளர் |
| 27 | செல்லம்மாள் / கோபால் | தூய்மை பணியாளர் |
| 28 | செல்வம் / மூர்த்தி | தூய்மை பணியாளர் |
| 29 | ஜெயலெட்சுமி / லெட்சுமணன் | தூய்மை பணியாளர் |
| 30 | P. அறிவுமணி | தூய்மை பணியாளர் |
| 31 | முருகன் / பழனி | தூய்மை பணியாளர் |
| 32 | S. முத்துபாண்டி | தூய்மை பணியாளர் |
| 33 | ருக்குமணி / அய்யாவு | தூய்மை பணியாளர் |
| 34 | காளியம்மாள் / பெருமாள் | தூய்மை பணியாளர் |
| 35 | தாமோதரன் / கேசவன் | தூய்மை பணியாளர் |
| 36 | பழனியம்மாள் | தூய்மை பணியாளர் |
| 37 | சுப்ரமணி / அம்மாசி | தூய்மை பணியாளர் |
| 38 | முருகன் / குருசாமி | தூய்மை பணியாளர் |
| 39 | M. சாந்தி | தூய்மை பணியாளர் |
| 40 | கவிதா / விஜயகுமார் | தூய்மை பணியாளர் |
| 41 | காளியப்பன் / கருப்பையா | தூய்மை பணியாளர் |

எனவே, அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017ஐ தொடர்ந்து தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையால் 01.04.2024 ஆம் ஆண்டுக்கு வெளியிடப்பட்டுள்ள அகவிலைப்படி ரூ.6593.25/–ஐ 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையால் 01.04.2025 ஆம் ஆண்டுக்கு வெளியிடப்பட்டுள்ள அகவிலைப்படி ரூ.6780/–ஐ 01.04.2025 முதல் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் 15 புள்ளி விவரத்தொகுப்பாளர்கள் மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பேருராட்சிகள், ஊராட்சிகளில் பணிபுரிந்த ஓட்டுநர் – 1, OHT ஆப்ரேட்டர்கள் – 14, புள்ளி விவரத்தொகுப்பாளர் – 1, தூய்மைப் பணியாளர்கள் – 26 ஆக மொத்தம் – 57. எனவே, இப்புள்ளி விவரப்படியும், அரசாணை எண். (2டி) 62, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017ன்படி, Semi–Skilled, Grade–II என்ற வகைப்பட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு மாத தொகுப்பூதியத்தினை ரூ.14,000/– ஆக உயர்த்தி 01.04.2025 முதல் வழங்குவது குறித்தும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** அரசாணை எண். 62 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.11.10.2017 இணைப்பில் Statement of Showing Details of Dearness Allowance – இல் Employment Under any Local Authority – All Corporation என்ற தலைப்பின்படி இம்மாநகராட்சியில் தற்பொழுது பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய மற்றும் தினக்கூலி பணியாளர்களுக்கு 01.04.2024 மற்றும் 01.04.2025ஆம் ஆண்டுகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அகவிலைப்படி மற்றும் அதற்கான நிலுவைத் தொகையினையும், மேலும் OHT ஆப்ரேட்டர்களுக்கு 01.04.2025 முதல் மாத தொகுப்பூதியமாக ரூ.14000/– ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க ஒப்புதல் வழங்கலாம்.

4357 / 2025 / சி1 (மையம்)

**தீர்மானம் எண்.328 பொருள்: 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் முதற்கட்டமாக 16.09.2022 முதல் 40 பள்ளிகளிலும், இரண்டாம் கட்டமாக 01.03.2023 முதல் 34 பள்ளிகளிலும் தொடங்கப்பட்டு தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி 74 பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தேவையான காலை உணவு, பாலக்கரை அரசு சையது முர்துஸா மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மைய சமையற் கூடத்தில் தயார் செய்யப்பட்டு, அனைத்து பள்ளிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு விநியோகம் செய்யப்படும் காலை உணவுகளை பெற்று, பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் பணியினை மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர்களால் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு தன்னார்வலர்கள் வீதம் நியமனம் செய்யப்பட்டு 74 தன்னார்வலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1, நாள்.02.11.2022ல் மேற்கண்டவாறு உணவு பெற்று வழங்கும் பணியினை மேற்கொண்டு வரும் தன்னார்வலர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.1500/– வீதம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், மாமன்ற தீர்மானம் எண்.458, நாள்.24.07.2024ல் மேற்கண்ட தன்னார்வலர்களுக்கு 31.03.2025 வரை மதிப்பூதியம் வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல் 2025 ஆம் மாதத்திற்கு தன்னார்வலர்களுக்கான மதிப்பூதியமாக தொகை ரூ.1,11,000/– ஐ கல்வி நிதியின் கீழ் வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும், 01.05.2025 முதல் 31.03.2026 வரை மதிப்பூதியமாக தொகை ரூ.11,10,000/ஐ கல்வி நிதியின் கீழ் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதியும் கோரி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) ஏப்ரல் 2025 ஆம் மாதத்திற்கு தன்னார்வலர்களுக்கான மதிப்பூதியமாக தொகை ரூ.1,11,000/– ஐ கல்வி நிதியின் கீழ் வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.
2) 01.05.2025 முதல் 31.03.2026 வரை மதிப்பூதியமாக தொகை ரூ.11,10,000/ஐ கல்வி நிதியின் கீழ் வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.
3) மேற்படி செலவீனத்தை 2025 – 2026 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் கல்வி நிதியில் கூலி – இதர இனம் ( 2101010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.40.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**இ8/15082/2023(மையம்)**

**தீர்மானம் எண்.329 பொருள்: 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் V, வார்டு எண் 24ல் உள்ள அனைத்து பகுதியிலுள்ள திடக்கழிவுகள் முழுவதும் வயலூர் புதைவடிகால் உந்துநிலையத்தில் வந்தடைகிறது. சேகர குழாய்க்கு வரும் மெயின் குழாய் சேதமடைந்துள்ளதால் மேற்கண்ட தெருவில் உள்ள புதைவடிகால் சேகர தொட்டிகள் நிரம்பி குடியிருப்புகளில் உள்ள கழிவறை குழாய் மூலம் வெளியேறுகிறது. மேலும் அம்மையப்பபிள்ளை நகர் மெயின் ரோட்டில் உள்ள புதைவடிகால் மெயின் குழாய் மூலம் அதனை சுற்றியுள்ள குறுக்கு தெருக்களில் உள்ள குடியிருப்பின் திடக்கழிவு செய்வதால் மெயின் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு இடையூறாக உள்ளதால் மேற்கண்ட புதைவடிகால் 400 எம் எம் விட்டமுள்ள ஏ.சி குழாய் மற்றும் 250 எம் எம் விட்டமுள்ள ஏ.சி. குழாய் மாற்றியமைக்கும் பணியின் அவசர அவசியம் கருதி புதைவடிகால் கழிவுநீர் உந்து குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள ரூ. 1.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.08%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த, **M/s. Vishwa Infra structure,** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/4818/2025 (மையம்)**

**தீர்மானம் எண்.330 பொருள்: 7 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் V, வார்டு எண் 28க்குட்பட்ட புது மாரி அம்மன் கோவில் அங்கன்வாடி அருகில் 800 எம் எம் விட்டமுள்ள DI குழாய் மூலம் பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து குழாய் பஞ்சப்பூர் கழிவுநீர் உந்து நிலையத்திற்கு செல்கிறது. மேற்கண்ட 800 எம் எம் விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாய்களில் மேற்கூறிய இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால், சாலையில் கழிவுநீர் கசிந்து வெளியேறி சுகாதாரக்கோடு விளைவிப்பதை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக சேதமடைந்த DI உந்து குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக 800 MM விட்டமுள்ள MS குழாய் அமைக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி புதைவடிகால் கழிவுநீர் உந்து குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள ரூ. 1.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.10%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த, **M/s. Vishwa Infra structure,** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/10897/2024 (மையம்)**

**தீர்மானம் எண்.331 பொருள்: 8 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.60, 62 மற்றும் 63க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 90 எம்.எம் விட்டமுள்ள குடிநீர் பகிர்மானக் குழாயில், காஜாமலை மெயின் ரோடு, கோகுலம் காலனி, கல்கி தெரு, இந்தியன் வங்கி சலை, சுந்தர் நகர் 6வது தெரு, கே.சாத்தனூர் மேலத் தெரு மற்றும் நேரு நகர் முதல் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த குழாய்களை அகற்றிவிட்டு புதிய குழாய்கள் அமைப்பதற்கும், புதிதாக 100 எம்.எம் விட்டமுள்ள வால்வுகளை interlink செய்தல் மற்றும் பழுதடைந்த வால்வுகளை சரிசெய்தல் ஆகிய பணிகளை குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும்** 0.06%, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 802 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்.332 பொருள்: 9 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–5, வார்டு எண்.55க்குட்பட்ட திண்டுக்கல் மெயின் சாலை, காந்தி நகர் முதல் மெயின் சாலை அருகில் செல்லும் குடிநீர் மெயின் குழாய் உடைந்துள்ளதால், சாலையில் குடிநீர் வெளியேறி சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. ஜெயநகர் முதல் மெயின் சாலையில் குடிநீர் பிரதான குழாயில் வால்வு பொருத்தி தொட்டி கட்டுதல் மற்றும் ஜே.பி. நகர் பகுதிக்கு குடிநீர் குழாய் இணைப்பு ஏற்படுத்தும் பணி போன்றவை குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும்** 0.06%, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 292/2025 / மையம்)**

**தீர்மானம் எண்.333 பொருள்: 10 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் கனரக TATA HITACHI இயந்திர வகை வாகனங்கள் – 3 எண்ணிக்கைகள் வாங்கப்பட்டு பயன்பட்டில் உள்ளது. இவ்வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை (உதிரி பாகங்கள் நீங்கலாக) (2 ஆண்டிற்கு) ஆண்டு ஒப்பந்த (AMC Labour) அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மேற்கொள்ள M/s. Tata Hitachi Construction Machinery Company Pvt Ltd, வாகன தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான M/s.Raam Baag Equipment & Services (P) Ltd., Trichy திருச்சிராப்பள்ளி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த மேற்கண்ட பணி காலம் 30.04.2025 உடன் முடிவடைந்து விட்டது.

மேற்படி பணியினை 01.06.2025 முதல் 31.05.2027வரை தொடர்ந்து ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 02.05.2025ந் தேதிய விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு.

| Sl. No | Vehicle Registration No | Vehicle Make | Date of Registration | Vehicle class | Chassis No | AMC (Including GST 18%) Labour Charges for 2 year (Excluding Spares) (In Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | TN 45 CB 1352 | Tata Hitachi Construction Machinery Company Pvt Ltd | 09.05.22 | HMV | THEWACD1JN0000872 | 66000.00 |
| 2 | TN 45 CB 3858 | | 18.07.22 | HMV | THEWACD1EN0001237 | 66000.00 |
| 3 | TN 45 CB 3857 | | 18.07.22 | HMV | THEWACD1CN0001238 | 66000.00 |
| **Total** | | | | | | **198000.00** |

மேற்கண்ட பணி காலம் 30.04.2025 உடன் முடிவடைந்து விட்டதால் பணியின் அவசியத்தினை கருதி M/s. Tata Hitachi Construction Machinery Company Pvt Ltd, நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான M/s.Raam Baag Equipment & Services (P) Ltd., திருச்சிராப்பள்ளி நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி ரூ.1,98,000/-யை ஏற்று ஆண்டு பராமரிப்பு பணியை ஒப்படைத்து மேற்கொள்ளப்படும் பொழுது, மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் பிரதிமாதம் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் (2 ஆண்டிற்கு) ஆண்டு பராமரிப்பு பணிக்கான (01.06.2025 முதல் 31.05.2027வரை) (AMC Labour) கூலி தொகை ரூ.1,98,000/-ஐ காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் கனரக TATA HITACHI இயந்திர வகை வாகனங்கள் - 3 எண்ணிக்கைகள் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் வாகன தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான M/s.Raam Baag Equipment & Services (P) Ltd., Trichy நிறுவனத்திடம் ஒப்படைத்து மேற்கொள்ளப்படும் பொழுது, மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் பிரதிமாதம் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் 2 ஆண்டு பராமரிப்பு பணிக்கான **(01.06.2025 முதல் 31.05.2027 வரை) (AMC Labour)** கூலி தொகை ரூ.1,98,000/-ஐ காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தை 2025-26ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம்.

378/2025/இ5(மை)

**தீர்மானம் எண்.334 பொருள்: 11 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் குடிநீர் விநியோகப் பணியில் பயன்படுத்தப்படும் புதிதாக வாங்கப்பட்ட 4 எண்ணிக்கை BS VI வகை வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான பராமரிப்பு பணிகளை (உதிரி பாகங்கள் நீங்கலாக) (2 ஆண்டிற்கு) ஆண்டு ஒப்பந்த (AMC Labour ) அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மேற்கொள்ள TATA வாகனத் தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 29.04.2025ந் தேதிய விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு

| வ . எண் | நிறுவனத்தின் பெயர் | வழங்கியுள்ள விலைப்புள்ளி இரண்டு ஆண்டிற்கு (GST உள்பட) |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் . செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் , திருச்சிராப்பள்ளி (Rs.46000 X 4 Nos ) | ரூ.1,84,000/- |

மேற்கண்ட பணியின் அவசியத்தினை கருதி **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி ரூ.1,84,000/ -யை ஏற்று ஆண்டு பராமரிப்பு பணியை ஒப்படைத்து மேற்கொள்ளப்படும் பொழுது, மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் பிரதிமாதம் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் (2 ஆண்டிற்கு) ஆண்டு பராமரிப்பு பணிக்கான (01.06.2025 முதல் 31.05.2027) (AMC Labour) கூலி தொகை ரூ.1,84,000/-ஐ காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

1. **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று குடிநீர் விநியோகப் பணியில் பயன்படுத்தப்படும் புதிதாக வாங்கப்பட்ட 4 எண்ணிக்கை BS VI வகை வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான பராமரிப்பு பணிகளை ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் பிரதிமாதம் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் 2 ஆண்டு பராமரிப்பு பணிக்கான **(01.06.2025 முதல் 31.05.2027) (AMC Labour )** கூலி தொகை **ரூ.1,84,000/-ஐ** காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தை 2025-26ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம்.

5211 /2025/ இ5(மையம் )

**தீர்மானம் எண்.335 பொருள்: 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 13

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை – தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 66 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் அவ்வப் பொழுது ஏற்படும் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான பராமரிப்பு பணிகளை (உதிரி பாகங்கள் நீங்கலாக) (2 ஆண்டிற்கு) ஆண்டு ஒப்பந்த (AMC Labour) அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மேற்கொள்ள M/s.TATA Motors Ltd, நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்,** திருச்சிராப்பள்ளி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த மேற்கண்ட பணி காலம் 31.03.2025 உடன் முடிவடைந்து விட்டது.

மேற்படி பணியினை 01.05.2025 முதல் 30.04.2027வரை தொடர்ந்து ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 29.03.2025ந் தேதிய விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு

| வ . எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (இரண்டு ஆண்டிற்கு) |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் . செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் , திருச்சிராப்பள்ளி (Rs.48000 X 66Nos ) | ரூ.31,68,000/– |

மேற்கண்ட பணி காலம் 31.03.2025 உடன் முடிவடைந்து விட்டதால் பணியின் அவசியத்தினை கருதி **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி ரூ.31,68,000/–யை ஏற்று ஆண்டு பராமரிப்பு பணியை ஒப்படைத்து மேற்கொள்ளப்படும் பொழுது, மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் பிரதிமாதம் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் (2 ஆண்டிற்கு) ஆண்டு பராமரிப்பு பணிக்கான (01.05.2025 முதல் 30.04.2027வரை) (AMC Labour) கூலி தொகை ரூ.31,68,000/–ஐ காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று திடக்கழிவு மேலாண்மை – தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 66 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் அவ்வப் பொழுது ஏற்படும் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான பராமரிப்பு பணிகளை ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் பிரதிமாதம் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் 2 ஆண்டு பராமரிப்பு பணிக்கான **(01.05.2025 முதல் 30.04.2027 வரை) (AMC Labour)** கூலி தொகை **ரூ.31,68,000/–ஐ** காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தை 2025–26ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில்மேற்கொள்ளலாம்.(2305301 இலகுரக வாகன பராமரிப்பு)

627/2025/ இ5(மையம்)

**தீர்மானம் எண்.336 பொருள்: 13 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அம்ரூத் 2016–17 திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் (Phase II) செயல்படுத்துவதற்கு ரூ.377.29 கோடி மதிப்பீட்டில், 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, தொகுப்பு எண். 1,2 மற்றும் 3ல் பணிகள் அனைத்தும் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. மேலும், தொகுப்பு எண்.1ல் மட்டும் இடைவெளி (Gap Works) பணிகள் மட்டும் நடைபெற்று வருகின்றன.

மேலும், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் (Phase III) பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு, அம்ரூத் 2016–17 திட்டத்தின் கீழ், ரூ.330.31 கோடி மதிப்பீட்டில் 1 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, 92 % பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 31.06.2025க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி மற்றும் சேவை கழகம், சென்னை (TNUIFSL) நிறுவனத்தால், இத்திட்டப் பணிகளை மேற்பார்வை செய்ய மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தை திட்ட கலந்தறிதர்குரியராக (Project Management Consultancy 36 மாதம் வரையிலான காலத்திற்கு தொகை ரூ.8,25,64,554/− + GST முதல் க்குள் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்பத்திரம் நிறைவேற்றப்பட்டு, மேலும் 31.03.2025 வரை TNUIFSL நிறுவனத்தால், காலநீட்டிப்பு செய்யப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்ட காலத்திற்குரிய தொகைகள் வழங்கப்பட்டுவிட்டது.

மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான மான்யம் மற்றும் கடன் முழுவதுமாக பெறப்பட்டு, செலவிடப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள பகுதி 2 மற்றும் பகுதி 3ல் அடங்கும் பணிகளுக்கு ஏற்படும் செலவினத்தை இம்மாநகராட்சி பங்களிப்பு தொகையில் இருந்து செலவு செய்து கொள்ள TNUIFSL, சென்னை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பகுதி 2 மற்றும் பகுதி 3ல் அடங்கும் பணிகளை மேற்பார்வை செய்தல், அளவு புத்தகங்களில் அளவீடுகளை பதிவு செய்தல், வரைபடங்கள் தயார் செய்தல், அனைத்து பணிகளும் முடிவுற்றதும் சோதனை ஓட்டம் செய்தல், பணிமுடிவுறு அறிக்கை தயார் செய்து, நகரப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து ஒப்புதல் பெறுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி கலந்தறிதர்குரியர் நிறுவனத்தை தேர்வு செய்ய காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால், இத்திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருதி, ஏற்கனவே இப்பணி மேற்கொண்ட கலந்தறிதர்குரியர் நிறுவனமான மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தாரையே தொடர்ந்து, பணி அமர்த்தி கொள்ளவும், மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை தனது கடித எண்.STC/TCMC /4914 நாள்.24.03.2025ம் நாளைய கடிதத்தில் கீழ்க்கண்ட விலையில் இப்பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளது.

| Sl.No | Position | No of Months | No of Person | Salary Per Month in Rs | 3 Months Expenditure in Rs |
|---|---|---|---|---|---|
| 1 | Construction Manager -Phase II | 3 | 1 | 275000.00 | 825000.00 |
| **2** | Construction Manager Phase III | 3 | 1 | 275000.00 | 825000.00 |
| 3 | Support Engineer/Phase II - 2 No | 3 | 2 | 110000.00 | 660000.00 |
| 4 | Support Engineer/Phase III - 3 Nos | 3 | 3 | 110000.00 | 990000.00 |
| **5** | Auto CAD | 3 | 1 | 50000.00 | 150000.00 |
| 6 | Site Supervisors - 6 Nos | 3 | 3 | 30000.00 | 270000.00 |
| 7 | Intermittent Experts | 1 | 1 | 275000.00 | 275000.00 |
| 8 | Office Manager / Cum Operator | 3 | 1 | 45000.00 | 135000.00 |
| 9 | Office Assistant | 3 | 1 | 20000.00 | 60000.00 |
| | **Sub Total (a)** | | | **11,90,000.00** | **4190000.00** |

| Sl.No | Position | Total MM | Per Month Exp in Rs | Over all Expenditure in Rs |
|---|---|---|---|---|
| 1 | Vehicle | 3 | 50000.00 | 150000.00 |
| 2 | Office Operations | 3 | 50000.00 | 150000.00 |
| 3 | Domestic Travel for intermittent staff | 5 | 5000.00 | 25000.00 |
| 4 | Lodging for Intermittent staff | 30 | 3000.00 | 90000.00 |
| | **Sub Total (B)** | | **108000.00** | **415000.00** |
| | **Grand Total (Including GST)** | | **12,98,000.00** | **46,05,000.00** |

எனவே 01.04.2025 **முதல்** 30.06.2025 **பணி முடிவுறும் வரை** (**பகுதி** 2 **மற்றும் பகுதி** 3 – 3 **மாதத்திற்கு மட்டும்**) மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை கலந்தறிதர்குரியராக பணி அமர்த்தி கொள்ளவும், ஒரு மாதத்திற்கு ரூ.12,98,000/− வீதம் 3 மாதத்திற்கு மட்டும் திட்ட பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.46,05,000/− (சேவைவரி உட்பட) செலவு செய்து கொள்ள அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி கலந்தறிதர்குரியர் நிறுவனத்தை தேர்வு செய்ய காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால், இத்திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருதி, ஏற்கனவே இப்பணி மேற்கொண்ட கலந்தறிதர்குரியர் நிறுவனமான மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தாரையே தொடர்ந்து, பணி அமர்த்தி கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. **01.04.2025 முதல் 30.06.2025 வரை (பகுதி 2 மற்றும் பகுதி 3 – 3 மாதத்திற்கு மட்டும்)** மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை கலந்தறிதர்குரியராக பணி அமர்த்தி கொள்ளவும், ஒரு மாதத்திற்கு ரூ.12,98,000/- வீதம் 3 மாதத்திற்கு மட்டும் திட்ட பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.46,05,000/- (சேவைவரி உட்பட) செலவு செய்து செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. மேற்கண்ட செலவினத்தை 2025-26ம் ஆண்டு வரவு செலவு திட்டம் (2203202) **பொறியியல் கலந்தறிதற்குரியர் கட்டணம்** என்ற தலைப்பின் கீழ் செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4842 /2025 /மையம்**

**தீர்மானம் எண்.337 பொருள்: 14 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்- 1குட்பட்ட மேலரண்சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடை எண்19-க்கு 30.04.2025ம் தேதியன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விவரம் | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 19 | 1 | K.சாஜீதீன் 23/3,ஆளவந்தான் நகர் , அண்ணா நகர், தென்னூர், திருச்சி-17 | 16000 | மேற்படி கடைக்கு 30.04.2025 ஆம் தேதி எட்டாவது முறையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றது. திரு. K.சாஜீதீன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.16000/- மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகை ரூ,14155/- விட ரூ.1845 கூடுதலாக உள்ளது. எனவே திரு. K.சாஜீதீன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்ய அனுமதிக்கலாம். |
| 2 | 19 | 2 | K.அசாருதீன் 23/3,ஆளவந்தான் நகர் , அண்ணா நகர், தென்னூர், திருச்சி-17 | 15500 | |

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட பட்டியலில் கலம் 6ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கடை எண்.19-க்கு வரப்பெற்ற உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளியை ஏற்று கடையை ஒப்படைக்க அனுமதிக்கலாம்.

<u>அ1/ 2517 /2023/(வா.கு-1)</u>

**தீர்மானம் எண்.338 பொருள்: 15 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 16

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1க்குட்பட்ட சத்திரம் பேருந்து நிலைய கடை எண்கள் 12,13,14,15,16,24,27,30,32,34,35,36,37, ஆகிய 13 கடைகளுக்கும் மற்றும் உணவுக் கூடத்திற்கும் (Food Court) கடந்த 30.04.2025ம் தேதியன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடை எண்கள் 13,14,15,16,30,32,34,35,36,37 ஆகிய 10 கடைகள் மற்றும் உணவகத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மீதம் உள்ள கடை எண்கள் 24, மற்றும் 27 ஆகிய 02 கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற மாத வாடகை தொகை விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | | | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விவரம் | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வித் தொகை | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 24 | 1 | ரெ.கணேசன் 16/94பட்டவர்த் ரோடு, திருச்சி | 28000 | 1 | வினித்குமார் 9A.தொப்பு தெரு, இருதயபுரம், திருச்சி | 36100 | கடை எண்.24க்கு 30.04.2025 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டார், ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட வரிசை எண்.1ல் கண்ட திரு. வினித்குமார் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.36100/- உயர்ந்த பட்ச கேள்வித் தொகையாகும். மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ. 10034/-ஐ விட ரூ.26066 கூடுதலாக உள்ளது.எனவே திரு. வினித்குமார் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகையை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்யலாம் |
| | | 2 | மூ.பழனியப்பன் 2/47பி,அழகுநகர், பூனாம்பாளையம், மண்ணசநல்லூர் திருச்சி | 27500 | 2 | ராஜேஷ் குமார் 24, பாலாஜி அவின்யூ, 4 வது கிராஸ், மேலசிந்தாமணி, திருச்சி | 34700 | |
| | | - | - | - | 3 | மணிகண்டன் 16பி. ஜஸ்வர்யா கார்டன், கம்பரசம் பேட்டை, திருச்சி | 28708 | |
| | | - | - | - | 4 | பொன்னன் 22, கிழக்கு தாராநல்லூர், திருச்சி | 17300 | |
| | | - | - | - | 5 | மாதவன் 38, தெற்கு தாராநல்லூர் திருச்சி | 17000 | |
| 2 | 27 | 1 | ராஜேஷ் குமார் 58,சங்கரன் பிள்ளை ரோடு, திருச்சி | 31500 | 1 | மூ.பழனியப்பன் 2/47பி,அழகுநகர், பூனாம்பாளையம், மண்ணசநல்லூர் திருச்சி | 37600 | கடை எண்.27க்கு 30.04.2025 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒரு நபர் கலந்து கொண்டார், நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட வரிசை எண்.1ல் கண்ட திரு. பழனியப்பன் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.37600/- உயர்ந்த பட்ச கேள்வித் தொகையாகும். மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ. 9995/-ஐ விட ரூ.27605 கூடுதலாக உள்ளது.எனவே திரு. பழனியப்பன் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகையை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்யலாம் |
| | | - | - | - | 2 | ராமன் 24, பாலாஜி அவின்யூ, 4 வது கிராஸ், மேலசிந்தாமணி, திருச்சி | 36500 | |
| | | - | - | - | 3 | ரெகுனியா 16பி. ஜஸ்வர்யா கார்டன், கம்பரசம் பேட்டை, திருச்சி | 35708 | |
| | | - | - | - | 4 | பிரபாகரன் 56சி, ஓடத்துறை கீழசிந்தாமணி திருச்சி | 16500 | |

<u>அலுவலக குறிப்பு</u>
(அ).மேற்கண்ட பட்டியலில் கலம் 9ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கடை எண்கள்.24,27க்கு வரபெற்றுள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளி தொகையை ஏற்று கடையை ஒப்படைக்க அனுமதிகலாம்
(ஆ,) கடை எண்கள் 12,13,14,15,16,30,32,34,35,36,37 மற்றும் உணவுக் கூடம்(Food Court)ஆகியவைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(இ) உயர்ந்தபட்ச ஏலதாரர்கள் 12 மாத வாடகையை முழுவதுமாக செலுத்தப்பட்டபின் 2வது கேள்விதாரரின் பொறுப்புத் தொகையை திரும்ப வழங்கலாம்.
<u>அ1/0009/2022/(வா.கு–1)</u>

**தீர்மானம் எண்.339 பொருள்: 16 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 17

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பெரியார் நகர் கலெக்டர் வெல் நீரேற்று நிலையத்தில் உள்ள 680 குதிரை திறன் கொண்ட 2 எண்ணிக்கையிலான மின்மோட்டார்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 34.00 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் யூனிட்–2 மின்மோட்டாருக்கான 3.3 KV 700 HO Neutral Side soft starter பழுதானதால் மின்மோட்டாரை தொடர்ந்து இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மேற்கண்ட பழுதுகனை சரிசெய்ய மதிப்பீடு ரூ.1.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**(இ4/ 2382 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்.340 பொருள்: 17 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 18

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.51, 52, 53, 54 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 110 எம்.எம் விட்டமுள்ள பிவிசி குழாய், 90 எம்.எம் விட்டமுள்ள பிவிசி குழாய், 100 எம்.எம் விட்டமுள்ள AC குழாய் மற்றும் 200 எம்.எம் விட்டமுள்ள CI மெயின் குழாய் ஆகியவற்றில் 29 இடங்களில் குடிநீர் கசிவுகள் ஏற்பட்டதால், குடிநீர் வழங்குவதில் சிரமத்தை தவிர்க்கவும், contamination ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், 150 எம்.எம் விட்டமுள்ள DI Gate valveம் உடைந்துள்ளதை சரிசெய்ய வேண்டியிருந்தது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் மெயின் குழாயினை மாற்றியமைப்பதற்கு மதிப்பீடு ரூ.3.70 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**(இ4/ 10908/2024 / மையம்)**

**தீர்மானம் எண்.341 பொருள்: 18 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 19

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.41 க்குட்பட்ட பகுதிகளில் KFW திட்டத்தின் கீழ் குடிநீர் பகிர்மானக் குழாய் மற்றும் வழங்கப்பட்ட வீட்டிணைப்புகளில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்திட வேண்டியுள்ளது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் விநியோக குழாயினை மாற்றியமைப்பதற்கு மதிப்பீடு ரூ.9.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**(இ4/ 10907/2024 / மையம்)**

**தீர்மானம் எண்.342 பொருள்: 19 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 20

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.44, 45, 46க்குட்பட்ட உள்ள 200 எம்.எம், 110 எம்.எம், 90 எம்.எம் விட்டமுள்ள பிவிசி குழாய், ஆகியவற்றில் 27 இடங்களில் குடிநீர் கசிவுகள் ஏற்பட்டதால், குடிநீர் வழங்குவதில் சிரமத்தை தவிர்க்கவும், contamination ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் மெயின் குழாய்களை மாற்றியமைப்பதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10%,** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 10906/2024 / மையம்)**

**தீர்மானம் எண்.343 பொருள்: 20 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.05, வார்டு எண்.28க்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் சிவப்பிரகாசம் சாலையில் உள்ள அண்ணா அறிவியல் பூங்காவில் சிறுவர்கள் விளையாடும், விளையாட்டு உபகரணங்கள் அமைத்தும், பூங்காக்களின் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டும், சமூக சிந்தனையுடன் மாநகராட்சியுடன் சேர்ந்து செயல்பட வேண்டி மனுதாரர் திரு.எஸ். ஷாஜஹான், திருச்சி என்பவர் 25.08.2023ல் ஆணையர் அவர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார்.

எனவே, வார்டு எண்.28க்குட்பட்ட மாநகராட்சி சொந்தமான அண்ணாநகர் சிவப்பிரகாசம் சாலையில் உள்ள அண்ணா அறிவியல் பூங்காவில் திரு.எஸ். ஷாஜஹான், திருச்சி மனுதாரர் மூலம் பூங்காவில் உள்ள மரம், செடிகளை பராமரித்து கொள்ளவும், பூங்காவில் ஏற்கனவே உள்ள மாநகராட்சி உபகரணங்களை நல்முறையில் பராமரிப்பு செய்திடவும், விளையாட்டு உபகரணங்களை மனுதாரர் அவரது சொந்த செலவில் வாங்கி பூங்காவில் பொருத்தியும், பொருத்திய உபகரணங்களை பொதுமக்களிடம் அதற்கான கட்டணங்களை வசூல் செய்துகொள்ளவும் (குறைவான வசூல் கட்டணத்தில்), மேலும், பூங்காவின் பாதுகாப்பு வேண்டி காவலர்களை மனுதாரர் அவரது சொந்த செலவில் பணி நியமனம் செய்து கொள்ளவும் மற்றும் ஆண்டுக்கு ரூ.10,000/– தொகையை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது. மேலும் பொதுப்பணித்துறை கட்டிடங்கள் பாதுகாப்பு சான்றிதழ் பெற்ற பின்பு ஆணை வழங்க கோரலாம்.

**அலுவலகக்குறிப்பு.**

அனுமதி அளிக்கலாம்.

**இ1/8901/2023(ம.எண்.05)**

**தீர்மானம் எண்.344 பொருள்: 21 மாமன்ற சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல் பொருள் எண்.21ல் பிழையாக அச்சிடப்பட்டுள்ள திரு.எஸ்.ஷாஜாகான், என்ற பெயருக்கு பதிலாக திரு.சி.முகம்மது இஸ்மாயில் என்றும், 25.08.2023–ல் என்பதற்கு பதிலாக 15.02.2025–ல் என்றும், ரூ.10000/– என்பதற்கு பதிலாக ரூ.25000/– என்ற திருத்தத்துடன் (அச்சு பிழையினை திருத்தம் செய்து) திரு.சி.முகம்மது இஸ்மாயில் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது**

**பொருள்: 22**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பொது சுகாதாரம் பேணும் வகையில் காற்று மாசுபடாமலும் சுற்றுச்சூழல் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறும் எரிவாயு சிலிண்டர் மூலம் பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் கோணக்கரை, ஓயம்மாரி, அம்பேத்கார் நகர், கருமண்டபம், பஞ்சப்பூர் மற்றும் அரியமங்கலம் ஆகிய 6 இடங்களில் நவீன எரிவாயு மையங்கள் அமைக்கப்பட்டு பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இந்நிலையில் அம்பேத்கார் நகர், கோணக்கரை, பஞ்சப்பூர் மற்றும் அரியமங்கலம் ஆகிய நான்கு நவீன எரிவாயு தகன மையங்கள் தற்போது தனியார் மற்றும் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒவ்வொரு சடலத்திற்கும் ரூ2500/– மட்டும் பொதுமக்களிடம் வசூல் செய்து இம்மையங்களில் பிரேதங்கள் தகனம் செய்யும் பணி மற்றும் பராமரிப்பு பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

ஓயம்மாரி மற்றும் கருமண்டபம் நவீன எரிவாயு தகன மையங்களில் பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் இம்மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்கண்ட இரண்டு நவீன எரிவாயு தகன மையங்களில் வேதங்கள் தகனம் செய்யும் பணி மற்றும் பராமரிப்பு பணிகள் ஆகிய அனைத்து பணிகளையும் செய்வதற்கும் விருப்பம் தெரிவித்து M/S MOKSHA DWARA, திருச்சி மற்றும் M/S SRI DHARDHINI FOUNDATION. திருச்சி ஆகிய இரண்டு நிறுவனங்கள் கடிதம் வழங்கியுள்ளது.

பொதுமக்கள் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி ஓயம்மாரி எரிவாயு தகன மையம் M/S SRI DHARDHINI FOUNDATION. திருச்சி தொண்டு நிறுவனத்தின் மூலம் பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கருமண்டபம் நவீன எரிவாயு தகன மையத்தில் M/S MOKSHA DWARA, திருச்சி தொண்டு நிறுவனத்தின் மூலம் பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை செய்ய மேற்கண்ட நிறுவனங்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மேற்கண்ட நிறுவனங்கள் பிரேதங்கள் தகனம் செய்ய ஒவ்வொரு சடலத்திற்கும் ரூ2500/- மட்டும் பொதுமக்களிடம் வசூல் செய்து இம்மையத்தில் பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஒவ்வொரு சடலத்திற்கும் பொதுமக்களிடம் வசூல் செய்யும் கட்டணத்திலிருந்து ரூ100/- தொகையினை மாநகராட்சிக்கு செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**

1. M/S SRI DHARDHINI FOUNDATION. திருச்சி தொண்டு நிறுவனம் மற்றும் M/S MOKSHA DWARA திருச்சி தொண்டு நிறுவனத்தின் மூலம் ஓயாமரி மற்றும் கருமண்டபம் மையங்களில் பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான பணி உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட நிறுவனங்கள் பிரேதங்கள் தகனம் செய்ய ஒவ்வொரு சடலத்திற்கும் ரூ2500/- மட்டும் பொதுமக்களிடம் வசூல் செய்து இம்மையத்தில் அனைத்து பணிகள் மேற்கொள்ளவும் ஒவ்வொரு சடலத்திற்கும் வசூல் செய்யும் கட்டணத்தில் இருந்து ரூ100/- தொகையினை மாநகராட்சி செலுத்தவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**எச்9/ 5990 /2024/மையம்**

**தீர்மானம் எண்.345 பொருள்: 22 ஓயாமாரி எரிவாயு தகன மையத்தை மாநகராட்சி தொடர்ந்து நடத்தவும், கருமண்டபம் நவீன எரிவாயு பிரேதங்கள் தகனம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை M/s Moksha Dowara திருச்சி தொண்டு நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்படும் என்ற திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 23

திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக ஆணைக்குழுவின்கீழ் செயல்படும் மாவட்ட மைய நூலக கட்டிடத்திற்கு 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டிற்கான பொது நூலகத் துறை ஒரு சேவை துறையாக எவ்வித இலாப நோக்கமின்றி செயல்பட்டு வருகிறது. மேலும் மதுரை. கோயம்புத்தூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 1920ம் வருடத்திய நகராட்சிகள் சட்டம் 83(1) சி மற்றும் 1994-ஆம் வருடத்திய மாநகராட்சிகள் சட்டம் 123ன் படியும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு எண் 87 (a) (b) (c)ன் படியும் கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொது நூலகங்களுக்கும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து விலக்களிக்க கோரப்பட்டுள்ளது.

2023-2024 வரை செலுத்த வேண்டிய சொத்துவரியை மாநகராட்சி நூலக வரியில் இருந்து ஈடுசெய்து கொள்ளப்பட்டது. 2024-2025 ம் ஆண்டிற்கு அரசிடமிருந்து பெறப்பட்ட தொகைக்கு வரவு வைக்கப்பட்டது. 2025-2026ம் ஆண்டு முதல் வரிவிதிப்பு எண் 086/019/903608 - 41563 ச.அடியில் உள்ள சொத்து மற்றும் 086/019/903493- 4599 ச.அடியில் உள்ள அரசு கட்டிடங்களுக்கு தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டு எண்.12A நாள்11.01.2018ன் படி வரிவிலக்கு அளிக்கலாம்.

எனவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட மைய நூலகம் தரைதளம் / முதல்தளம் / இரண்டாம் தளத்துடன் கூடிய கட்டிடம் முழுமையாக மாவட்ட மைய நூலக பயன்பாட்டில், பொது மக்களுக்கு இலாப நோக்கமின்றி ஒரு சேவைத் துறையாக செயல்பட்டு வருவதால், மேலே தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மதுரை, கோயம்புத்தூர், திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகளில் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டதுபோல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட மைய நூலக கட்டிடத்திற்கு சொத்துவரி எண்கள் 086/019/903608, 086/019/903493 செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட மைய நூலகம் தரைதளம் / முதல்தளம் / இரண்டாம் தளத்துடன் கூடிய கட்டிடம் முழுமையாக மாவட்ட மைய நூலக பயன்பாட்டில், பொது மக்களுக்கு இலாப நோக்கமின்றி ஒரு சேவைத் துறையாக செயல்பட்டு வருவதால், தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டு எண்.12A நாள்11.01.2018ன் படி வரிவிலக்கு அளிக்கலாம் என தெரிவித்தன் அடிப்படையில் வரிவிலக்கு அளிக்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அ3/ 947 /2022 (வா.கு.அ-1)

**தீர்மானம் எண்.346 பொருள்: 23 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 24

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024–25ன் கீழ், கீழ்க்கண்டுள்ள பணியினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.18 நாள்.28.02.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 370/ 2024–25ன் வாயிலாக 04.04.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மண்டலம்–4க்குட்பட்ட தெருக்களில் சேதமடைந்துள்ள தார்சாலைகளில் தார்பேட்ச் அமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.20.00 இலட்சம்** | 1.மெசர்ஸ்.KKK கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br>0.07% குறைவு<br><br>2.மெசர்ஸ்.MM எண்டர்பிரைசஸ், திருச்சி<br>1.40% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். KKK கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்டுள்ள பணிக்கான மதிப்பீட்டிற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.18 நாள்.28.02.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 600/2025 / மையம்**

**தீர்மானம் எண்.347 பொருள்: 24 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் நிர்வாக அனுமதி எண். 01 நாள். 03.01.2025ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 348 / 2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 26.03.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் 28க்குட்பட்ட பாரதியார் தெரு மற்றும் விவேகானந்தர் தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணி<br><br>**மதிப்பீடு ரூ,36.50 இலட்சம்** | 1.திரு.பி.எஸ்.அப்துல் ஜலீல், திருச்சி<br>0.07% குறைவு<br><br>2, M/s. Gateway Enterprises திருச்சி<br>0.95% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.பி.எஸ்.அப்துல் ஜலீல் திருச்சி ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டை **காட்டிலும்** 0.07% **குறைவான** செய்து தர சம்மதம் வழங்கியுள்ளதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம் |

**அலுவலகக் குறிப்பு:**

1. மாண்புமிகு மேயர் நிர்வாக அனுமதி எண். 01 நாள். 03.01.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

இ6/ 404 /2024 ( மையம்)

**தீர்மானம் எண்.348 பொருள்: 25 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–2க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024–25ன் கீழ், இப்பணிகளை மேற்கொள்ள வார்டுக்குழு தீர்மான எண்.221, நாள்.28.01.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.330/2024–25ன் வாயிலாக மேற்கொள்ள 04.03.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | மண்டலம்–2, வார்டு எண்.59க்குட்பட்பட்ட உலகநாதபுரம் மா.பொ.சி தெருவில் குடிநீர் விநியோக குழாயினை மாற்றியமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.1.95 இலட்சம்** | 1.திரு.R.ராமதாஸ், திருச்சி<br>0.26% குறைவு<br><br>2.திரு.K.ராமசாமி, திருச்சி<br>0.62% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.R.ராமதாஸ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.26 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு வார்டுக்குழு தீர்மான எண்.221, நாள்.28.01.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

இ4 / 9939/2024 / மையம்

**தீர்மானம் எண்.349 பொருள்: 26 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 27

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 09.05.2025ம் தேதியன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.62 பஞ்சப்பூரில், கட்டிமுடிக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் ஆகிய திட்டப்பணிகளுக்கு திறப்பு விழாவும் மேலும் பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட உள்ள பணிகளை தொகுத்து வீடியோ தயார் செய்து வழங்கும் பணியினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் இப்பணியினை மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளித் தொகை ரூ.9,99,932/– வழங்கிய மெசர்ஸ். Lead To Animation, சென்னை நிறுவனம் மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ1/6203/2025/மையம்)

**தீர்மானம் எண்.350 பொருள்: 27 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது,**

## பொருள்: 28

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–1, வார்டு எண்.12க்குட்பட்ட கம்பரசம்பேட்டை அய்யளம்மன் படித்துறை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து செல்லும் 600 எம்.எம் விட்டமுள்ள குடிநீர் உந்துக் குழாயின் மூலம் வார்டு எண்.33 முதல் 42க்குட்பட்ட பகுதிவாழ் பொதுமக்களுக்கு குடிநீர் வழுங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வார்டு எண்.12, பழைய கரூர் சாலையில் உள்ள அஜீஸ் அரிசி கடை அருகிலும், காவல் நிலைய சோதனை சாவடி அருகிலும் செல்லும் மேற்கண்ட குடிநீர் உந்துக் குழாயில் ஏற்பட்ட கசிவுகளை, குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், சரிசெய்ய மதிப்பீடு ரூ.2.35 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06%,** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 515/2025 / மையம்)**

**தீர்மானம் எண்.351 பொருள்: 28 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது,**

## பொருள்: 29

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஆளவந்தான் படித்துறை நீரேற்று நிலையத்தில் உள்ள 75 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 9 MLD குடிநீர் பொதுமக்களுக்கு வழுங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி மோட்டார் தொடர் இயக்கத்தின் காரணமாக பழுது ஏற்பட்டது.

மேலும் பொன்மலைப்பட்டி இடைநிலை நீர்தேக்க தொட்டி நீரேற்று நிலையம் மற்றும் கம்பரசம்பேட்டை நீரேற்று நிலைய infiltration wellல் உள்ள 35 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் தொடர் இயக்கத்தின் காரணமாக பழுதாகியுள்ளது. அதனை ஆய்வு செய்தததில் மின்மோட்டாரின் காயில் முழுவதுமாக தீய்ந்துள்ளது என்பது கண்டறியப்பட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மேற்கண்ட பழுதுகளை சரிசெய்ய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%,** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 2170 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்.352 பொருள்: 29 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது,**

## பொருள்: 30

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 5 மண்டலங்களில் உள்ள புதைவடிகால் குழாய் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்கு ஏற்கனவே ஜெட்ராடர் வாகனங்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் அதிக ஆழமுள்ள ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதில் மண்துகள்களை அப்புறப்படுத்த முடியாமல் கால தாமதம் ஏற்படுகிறது. இவ்வாறு அதிகம் ஆழமுள்ள ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை உடனடியாக நீக்குவதற்கு அதி நவீன வகை Super sucker cum Jetting machine வாகனம் – 1 எண்ணிக்கை அவசியம் தேவைப்படுகிறது.

மேற்படி, தேவைப்படும் அதி நவீன வகை Super sucker cum Jetting machine வாகனம் – 1 எண்ணிக்கை ரூ.378.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வாங்கிக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.16492/2023/EA–2, நாள்:25.06.2024ல் உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.KMS Transport, Erode நிறுவனத்தாருக்கு 27.08.2024ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு, வாகனத்திற்கான கட்டுமானப்பணி நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில், வடகிழக்கு பருவ மழையால் இம்மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை அடைப்பு ஏற்பட்டுள்ளதால் Machineholes–களில் உள்ளஅடைப்புகளை உடனடியாக நீக்கவேண்டி அனைத்து மண்டல இளநிலை பொறியாளர்கள் அறிக்கை சமர்பித்துள்ளனர். மேற்படி புதிய வாகனத்தினை ஒப்பந்ததாரர் மாநகராட்சி வசம் ஒப்படைத்து பணி மேற்கொள்ள கால தாமதம் ஆகும் என்பதாலும், பொதுமக்களின் நலன் கருதி உடனடியாக பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023, பிரிவு 57(7)ன் கீழ் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்கள் 27.12.2024ல் அனுமதி அளித்தன் அடிப்படையில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்த M/s.Whale Enterprise private Limited, Coimbatore–48 நிறுவனத்தாருக்கு உத்திரவு வழங்கி 25 நாட்களுக்கு ரூ.24,00,000/– (ரூ.96000/– X 25 நாட்கள்) செலவில் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**10771/2024/இ5 (மையம்)**

**தீர்மானம் எண்.353 பொருள்: 30 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது,**

## பொருள்: 31

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் நிர்வாக அனுமதி எண். 02 நாள். 03.01.2025ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 352 / 2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 26.03.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் 11க்குட்பட்ட அண்ணாமலை நகர் (086011R5495) பிரதான சாலையில் பழுதடைந்த சாலையினை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்<br><br>**மதிப்பிடு ரூ 39.80 இலட்சம்** | 1. M/s. M M Enterprises, திருச்சி<br>0.08% குறைவு<br><br>2, M/s. S S Sundar Construction திருச்சி<br>1.39% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. M M Enterprises திருச்சி நிறுவனத்தார்** மதிப்பீட்டை காட்டிலும் 0.08% குறைவான செய்து தர சம்மதம் வழங்கியுள்ளதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம் |

**அலுவலகக் குறிப்பு:**

1. மாண்புமிகு மேயர் நிர்வாக அனுமதி எண். 02 நாள். 03.01.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 406 /2024 ( மையம்)**

**தீர்மானம் எண்.354 பொருள்: 31 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 32

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024–25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் நிர்வாக அனுமதி எண். 16 நாள். 27.01.2025ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 353 / 2024–25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 26.03.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் 6க்குட்பட்ட சிவராம் நகர் பகுதிகுட்பட்ட இடத்தில் புதிதாக 10 HP மின்மோட்டார் வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணி<br><br>**மதிப்பிடு ரூ11.00 இலட்சம்** | 1.திரு.எஸ்.வீராசாமி திருச்சி<br>0.08% குறைவு<br><br>2,திரு.ஆர்.ராஜ்குமார் , திருச்சி<br>0.42% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எஸ். வீராசாமி** திருச்சி நிவனத்தாரர் மதிப்பீட்டை காட்டிலும் 0.08% குறைவான செய்து தர சம்மதம் வழங்கியுள்ளதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம் |

**அலுவலகக் குறிப்பு:**

1. பணிக்குழுவின் நிர்வாக அனுமதி எண். 16 நாள். 27.01.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 4672 / 2024 ( மையம்)**

**தீர்மானம் எண்.355 பொருள்: 32 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:33

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு-IIIக்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2024-25ன் கீழ், அட்டவணையில் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு, ஆணையர் அவர்களின் தீர்மானம் எண். 244, நாள்.28.01.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 345/2024-25ன் வாயிலாக 20.03.2025 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டுக் குழு அலுவலகம் – III, வார்டு எண். 35-க்குட்பட்ட தெற்கு உக்கடை பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.224 மற்றும் 225க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி. **மதிப்பீடு ரூ.28.00 இலட்சம்.** | 1. திரு.ஆர். ராமதாஸ், திருச்சி. 0.07% குறைவு.<br>2. திரு. கே. ராமசாமி, திருச்சி. 0.77% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.ஆர்.ராமதாஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு :**

1) ஆணையர் அவர்களின் தீர்மானம் எண். 244, நாள்.28.01.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ8 / 850 / 2025 (மையம்)**

**தீர்மானம் எண்.356 பொருள்: 33 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:34

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் நிர்வாக அனுமதி எண். 15 நாள். 27.01.2025ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 349 / 2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 26.03.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

